குடும்ப நலத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு கருச்சிதைவு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

குடும்ப நலத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் எவ்வளவு பெண் களுக்கு கருச்சிதைவு 31—3—1972 வரை செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : யாருக்கும் செய்யப்படவில்லை.

திரு. எல். பலராமன் : இந்தக் கருத்தடை பெண்களுக்குச் செய்வது, இந்துமத அடிப்படையில் பார்த்தால், பாவமல்லவா ? அது குறித்து நம்முடைய தி.மு.க. அரசின் கொள்கை என்ன ? அது என்ன கருதுகிறது என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாவ புண்ணியம் பற்றி அகில இந்திய அரசுக்கு என்ன கருத்தோ அதே கருத்துத்தான் தமிழக அரசுக்கும் இருக்கிறது. இது கருத்தடை அல்ல, கருச்சிதைவு. சமுதாயத்தில் இந்தக் கருவுற்ற பல பெண்கள் வாழ்க்கையில் தொல்லை களுக்கு உள்ளாகிறார்கள். அந்தக் கருச்சிதைவு செய்யாவிடில் ஏற்படக்கூடிய நோய், நரம்பு பலவீனம் முதலியவைகளால் வரக் கூடிய அபாயங்களுக்காகவும் அல்லது வேறு தவறுகள் காரணமாக ஏற்பட்டிருப்பின் அவர்கள் பரிதாபமான நிலைக்கு ஆளாக்கப்படு வதைத் தடுப்பதற்காகவும் அந்த நிலையில் கருவை அழிப்பதற்கு இது உதவியாகச் செய்யப்படுகிற ஒன்றாகும். அந்த நிலையில், ஏப்ரல் மாதம் 218 பேருக்கும், மே மாதம் 311 பேருக்கும், ஜூன் மாதம் 251 பேருக்கும் நடைபெற்றிருக்கிறது. ஏறத்தாழ இப்போது 1000 பேருக்கு இந்த 6 மாதத்தில் நடைபெற்றிருக்கிறது.

Satellite Towns

* 221 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether satellite towns are to be developed around **Madras** City ; and

(*b*) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 23]

துணை நகரங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரைச் சுற்றிலும் துணை நகரங்கள் உருவாக்கப்படவிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், அவை பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : சென்னை மாநகரில் பெருகிவரும் மக்கள் தொகையைச் சமாளிப்பதற்காக, நகரமைப்புத் துறை இயக்குநர், செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள செங்குன்றம், திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி ஆகிய மூன்று துணை நகரங்களின் மேம்பாட்டிற்கான ஆய்வுகளை நடத்தி செயற்குறிப்புகள் தயாரித்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணை நகரங்கள் எத்தனை ஆண்டுகளுக்குள் அமைக்கப்படும், அதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் ? அதோடு சென்னையில் பாதாள ரயில் போடும் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு சென்னை நகரத்தின் மக்கள் தொகை 25 லட்சம். அது 1991-ஆம் ஆண்டில், ஏறக்குறைய 53 லட்சம் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. சென்னை நகரத்தில் மக்கள் தொகை பெருக்கத்தால் பல்வேறு வசதிகளும் மிகப் பெரிய அளவுக்கு தேவைப்படும். ஆகவே சென்னை நகரத்தைச் சுற்றி 15 மைல், 20 மைல் தொலைவில் துணை நகரங்கள் அமைக்கப்படுமானால், இங்கே மக்கள் பெருக்கத்தைச் சமாளிக்கப் பயன்படும் என்று கருதப்படுகிறது. அப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால், 20 ஆண்டு காலத்துக்கு ஏறத்தாழ 980 கோடி ரூபாய் தேவை அல்லது 1,000 கோடி ரூபாய் தேவை. இதில் முதல் 5 ஆண்டு காலத்துக்குக் குறைந்தது 180 கோடி ரூபாய் தேவை. இதை மத்திய அரசுக்கும் தெரிவித்து அதன் உதவி தேவை என்று கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சென்னை கார்ப்பரேஷன் எல்லையைத் தாம்பரம் வரைக்கும் விஸ்தரிக்க திட்டம் ஏதாவது இருக்கிறதா ? அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் இதன் கீழ் பரிசீலனையில் இல்லை.

Repatriates Co-operative Bank

* 222 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Repatriates Co-operative Bank is granting loans to repatriates in this State; and

(b) if so, the amount so far given to them?

அகதிகள் கூட்டுறவு வங்கி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அகதிகள் கூட்டுறவு வங்கி இம்மாநிலத்திலுள்ள அகதிகளுக்குக் கடன்கள் வழங்கி வருகிறதா ?

(இ) ஆமெனில், இதுவரை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) ஆம்.

(இ) 31—3—1972 வரையில் ரூபாய் 84.12 லட்சம் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டன.

Committee for the Rehabilitation of the Beggars

* 223 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government have constituted any Committee for the rehabilitation of the beggars ;

(b) if so, the details thereof ; and

(c) the ground on which the Members have been nominated?